தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, தை 29, திருவள்ளுவர் ஆண்டு–2050

2019 பிப்ரவரி 12, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

மரக் கன்றுகள் நடுதல்

***26865—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி, பெருமுகை மற்றும் சலவன்பேட்டை ஆகிய மலைப் பகுதிகளில் மரக் கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

[2019 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம்முடைய வேலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் மலைப் பகுதியில் மரக் கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். வேலூர் சட்டமன்றத் தொகுதிக்குள் அடங்கிய சத்துவாச்சாரி, பெருமுகை மற்றும் சலவன்பேட்டை ஆகிய மலைப் பகுதிகளில் கோட்டமலை மற்றும் பாலமதி காப்புக் காடுகள் உள்ளன. இந்த மலைப் பகுதிகளில் மண் வளத்திற்கேற்ப மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஆல், அரசு, மகோகனி, வேங்கை போன்ற 30,000 பல்வகை மரக் கன்றுகள் நடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு திட்டங்களின்மூலம் மரம் வளர்ப்பு நடவடிக்கைகளால், 2011–க்கு முன்னர் 21.76 சதவிகிதமாக இருந்த பசுமைப் போர்வை, 2017–ல் 23.57 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 1.81 சதவிகிதமாக உயர்ந்து, அகில இந்திய அளவில் தமிழகம் முன்னிலையில் திகழவும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் என்றால் வெயிலூர் என்று எல்லோருக்கும் தெரியும். சென்ற ஆண்டுகூட 108 டிகிரி, 110 டிகிரி வெயில் வேலூரிலே இருந்தது. அதனால்தான், மலைப் பகுதியிலே பெருமுகை பகுதி, சத்துவாச்சாரி பகுதி, காகிதப்பட்டறை பகுதி, சைதாப்பேட்டை பகுதி, Old Town பகுதி, சலவன்பேட்டை பகுதிகளில் எல்லாம் செடி நட்டு மரமாக வளர்ந்தால் வெயிலூர், நிழலூராக மாறும் என்கிற காரணத்தால் சட்டமன்றத்திலே இந்த வினாவினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன பதிலிலே அது அடங்கியிருக்கிறது. இருந்தாலும் என்னுடைய குறிப்பைப் பார்த்து, மேலும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆய்ந்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தளபதி, தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் வேலூர், மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது. அப்படி எங்களுடைய தளபதி அவர்கள் துணை முதலமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் இருந்தபோது வேலூரை மாநகராட்சியாக உருவாக்கித் தந்திருக்கின்றோம். வெயிலூரரை நிழலூரராக ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான்,* by–pass road, National Theatre road, Green Circle *உள்ளிட்ட பகுதிகளிலெல்லாம் செடி நடப்பட்டு அவை மரமாகி இன்றளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல, வேலூர் மாநகரத்தினை மீண்டும் உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் இவ்வினாவினை கேட்கின்றேன்.*

அதேபோல, அரியூர் பகுதியிலே மலைக்கோயில் இருக்கிறது. ஸ்ரீபுரத்தில் பார்த்தீர்களென்றால், கோயில் சார்பிலே செடிகளையெல்லாம் நட்டு வளர்த்திருக்கிறார்கள். எங்குமே மழை பெய்யவில்லையென்று சொன்னாலும், அங்கு மழை பெய்கிறது. அதுபோன்று வேலூர் மாநகரத்திலே மரம் நட்டால் சிறப்பாக மழை வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மலைப் பகுதி, Old Town *பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சைதாப்பேட்டை பகுதியில் சிறுபான்மையின மக்கள் 40 ஆண்டுக்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கினால் சிறப்பாக இருக்குமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பசுமைப் போர்வையை அதிகரிக்கவும், பொதுமக்கள் மற்றும் இளம் தலைமுறையினரான மாணவ–மாணவியரிடம் மரம் வளர்ப்பு குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், வன உயிரினங்கள் வாழ்வதற்கான சுற்றுச்சூழல் சமநிலையினை பராமரிப்பு மற்றும் உறுதி செய்யவும், வனக் கொள்கையின்படி நாட்டின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கினை வனப் பரப்பாக்கவும், பல்வேறு மரம் வளர்ப்புத் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு, இப்போதும் அவை தொடர்ந்து நடைபெறுகின்றன. அதன்படி, ஒவ்வொரு வருடமும் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளில் மாபெரும் மரம் நடவுத் திட்டம், 'Massive Tree Plantation' எனும் புரட்சிகரமான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்றுவரை மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூரிலே நடப்பட்ட மரங்களைப் பற்றிச் சொன்னார்கள். வேலூரில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில், மரம் வளர்க்கின்ற சிறப்பான பணியினை வனத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. வேலூர் மட்டுமல்ல, அனைத்துப் பகுதிகளுக்கும் அதனைத் திறம்பட செயல்படுத்துவதற்கு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 2011–2012 முதல் 2016–2017 வரை ரூ.3 கோடியே 75 இலட்சம் செலவில் மரக் கன்று நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி எடுக்கப்பட்ட மரம் வளர்ப்பு நடவடிக்கைகளால் 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் 21.76 சதவிகிதமாக இருந்த பசுமைப் போர்வை 2017–ல் 23.57 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. ஏற்கெனவே, இதை நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இப்போது ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக மரம் வளர்த்தல், வனத் துறையின் மூலமாக மரம் வளர்த்தல் போன்ற அத்தனைப் பணிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். தேசிய காடு வளர்ப்புத் திட்டம், National Afforestation Programme மூலமாக 2016–2017 ஆம் ஆண்டில் 1,800 ஹெக்டேர் பரப்பளவில் மரக் கன்று நடவுப் பணிகள்

2019 பிப்ரவரி 12]

நடைபெற்றன. நம்முடைய Raising Babul Plantation Scheme *என்ற திட்டத்தின்கீழ் 2016 வரை, 42,40,687 கருவேல மரங்கள் நடப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிறைய மரம் வளர்க்கின்ற பணிகள் நடைபெறுகின்றன. தேக்கு மரம் உற்பத்தித் திட்டம், சந்தன மரம் வளர்த்தல் திட்டம், செம்மரம் வளர்த்தல் திட்டம், இலவச மரக் கன்றுகள் வழங்குதல் திட்டம் போன்ற பல திட்டங்கள் மூலமாக இப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தமட்டில், மரக் கன்றுகளை நடுகின்றனர். ஆனால், வனத்திலே உள்ள மிருகங்கள் அந்த மரக் கன்றுகளை அழித்துவிடுகின்றன. அதேபோல, விவசாயத்தையும் அந்த மிருகங்கள் அழித்துவிடுகின்றன. இது தொடர்ந்து தமிழ்நாட்டிலே நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனத்திலேயிருந்து வரக்கூடிய பன்றிகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், அவற்றைக் குறைப்பதற்கு, அவற்றைக் கொல்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய நிலை என்ன? இப்போது நீங்கள் எத்தனை பன்றிகளைக் கொன்றிருக்கிறீர்கள் என்ற விவரத்தைச் சொல்ல வேண்டும். அடுத்தபடியாக ஒரு யானை, 'சின்னத்தம்பி' என்று பெயர் சொல்கிறார்கள், அந்த யானையினுடைய தற்போதைய நிலை என்ன? அதை வனத்திற்குள் அனுப்பிவிட்டீர்களா அல்லது அதற்குப் பயிற்சி கொடுப்பதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? வன மிருகங்களால் மக்களுக்குப் பல இடங்களில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். வன மிருகங்களுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்டது என்று நான் கருதுகிறேன். இதற்கு என்ன செய்யலாம் என்பதையும் நீங்கள் யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்குரிய நடவடிக்கை எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மரக் கன்றுகள் நடுவது தொடர்பானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார். பதில் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால், தனிக் கேள்வி போடச் சொல்லவும்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: இல்லை, பதில் சொல்லலாம், பிரச்சினை ஒன்றுமில்லை. அவருக்கே தெரியும், தினசரி கதாநாயகன் சின்னத்தம்பி யானை. அது இன்றைக்கு எங்கே போகிறது, எங்கே வருகிறது என்பதை தொலைக்காட்சிகளிலெல்லாம் சொல்கிறார்கள். அதில் ஒன்றும் இரகசியமே இல்லை. அதுகுறித்து, இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கவிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற சின்னத்தம்பி என்கிற யானையைப் பிடித்து, காட்டுக்குள் விடுவதுதான் கடைசியான நிலை.

முற்பகல் 10—10

எந்த மிருகத்தையும் துன்புறுத்த வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு இல்லை. மக்களிடமிருந்து மிருகங்களையும், மிருகங்களிடமிருந்து மக்களையும் காப்பாற்றுவது அரசின் கடமை. அடுத்து, பன்றிகளைக் குறித்து கேட்டார்கள். பன்றிப் பிரச்சினை குறித்து எங்கெங்கு சொல்கிறார்களோ, அங்கெல்லாம் வனத் துறையின் மூலமாக அவற்றை சுட்டுப் பிடிப்பதற்குரிய உத்தரவை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக இங்கே அறிவித்திருக்கிறோம். அதன்படி இதுவரையில் கேட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சுடுகின்ற வேலைகள் எங்களுக்கு வாய்க்கவில்லை. அப்படி ஒருவேளை வந்தால் தகவலை சபைக்குத் தெரிவிக்கிறோம். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலே வனத் துறையினுடைய பரப்பளவு

2019 பிப்ரவரி 12]

33 சதவிகிதம் இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது 23 சதவிகிதம் பரப்பளவில் வனம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியா முழுவதும், உலகம் முழுவதும் புவி வெப்பமயமாவது அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. சுற்றுச்சூழல் பாதித்துக் கொண்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு மழையினுடைய அளவு குறைந்து கொண்டே வருகிறது. இந்த ஆண்டுகூட வானிலை ஆய்வு மையத்தின் சார்பில் என்ன சொன்னார்களென்றால், முதலில் 112 சதவிகிதம், அதாவது இயல்பைக் காட்டிலும் 12 சதவிகிதம் கூடுதலாக மழை பெய்யும் என்று சொன்னார்கள். ஆனால், பல்வேறு மாவட்டங்களில் போதுமான மழை பெய்யவில்லை. இப்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகின்ற சாலைகளின் ஓரங்களில் இருக்கின்ற மரங்களெல்லாம் வெட்டப்படுகின்றன. அந்தச் சாலைகளின் ஓரங்களில் மரங்களே நடுவதில்லை. இப்போது திருப்பூரிலெல்லாம் சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் நிறைய மரங்களை அங்கே நடுகிறார்கள். அதனால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இதை சிறப்புத் திட்டத்திலே எடுத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் வனத் துறையின் மூலமாக, ஊரகச் சாலைகளிலே மரங்களை வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்களை நடுகிறார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், அவற்றைப் பாதுகாக்க வேண்டும். அவற்றுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். 10 நாட்கள், 20 நாட்கள் அவற்றுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டு, பின்னர் தண்ணீர் ஊற்றப்படாததால் அவை காய்ந்து போகின்றன. நிறையபேர் மரங்களை நடுவதற்கு ஆர்வமாக இருக்கிறார்கள். அதனால், யார் யார் மரம் நடுவதற்கு விருப்பப்படுகிறார்களோ, அவர்களோடு ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்களை இணைத்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, வனத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய எல்லாத் துறைகளும் ஒன்றிணைந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அந்தச் சமூக ஆர்வலர்களை வைத்து, அனைத்து ஊராட்சி ஒன்றியச் சாலைகள், நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகளிலெல்லாம், தேசிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலெல்லாம் மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு செய்ய

வேண்டும். அதேபோல், அரசுப் புறம்போக்கு நிலங்கள், இந்து சமய அறநிலையத் துறைக்குட்பட்ட கோயில் நிலங்களெல்லாம் நிறைய இருக்கின்றன. அதனால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இதைச் சிறப்பு நிகழ்வாக எடுத்து, மழையினுடைய அளவை அதிகரிப்பதற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற விதத்திலும், வருங்காலத்திலே மரங்களை வளர்க்கின்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையின் அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தினாலே, மிகத் தெளிவாக மரம் வளர்க்கின்ற பிரச்சினையைக் கையாள்வதால் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறைகள் மூலமாக National Highways ஓரங்களில் மரங்களை நட்டு, லாரிகள் மூலமாக regular ஆக தண்ணீர் ஊற்றுகின்ற நிகழ்வு பல இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. மரம் வளர்க்கின்ற பணிகளை, National Highways Authority செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழ்நாட்டில், அதைக் கட்டாயம் செய்ய வேண்டுமென்று வனத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதன்படி நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்லியிருக்கிற மற்ற பகுதிகளிலும் மரங்கள் வளர்க்கின்ற சூழ்நிலைகள் உள்ளன. கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் ரூ.54 கோடி மதிப்பீட்டில் பனை மரம், சவுக்கு, தேக்கு மற்றும் அலையாத்தி காட்டு மரம், mangrove போன்ற மரங்களை, புயலினால் பாதிக்கப்பட்டாலும் விழாத அளவுக்கு நல்ல மரங்களை நடுவதற்கான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதன்படி மரம் நடுகின்ற பணி நடைபெற்று வருகின்றது. பசுமைப் போர்வையைப் பொறுத்தவரை, 33 சதவிகிதம் பரப்பளவில் மேலும் ஒரு சதவிகிதம் உயர்ந்து, நம்முடைய தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.